## August 2, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஒலியை விட 10 மடங்கு வேகத்தில பாயக்கூடிய தங்களின் புதிய வகை ஏவுகணையான 'ஆரெஷ்னிக்' அண்டை நாடான பெலா ரஸில் நிலைநிறுத்தப்படும் என்று ரஷிய அதிபர் விளாதி மீர் புதின் கூறியுள்ளார்.
2. அதிபர் பதவிக் காலத்தை காலவ ரையின்றி நீடிக்கும் அரசியல் சாசன சட்டத் திருத்தத்துக்கு எல்-சால்வடார் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
3. தென் ஆப்பிரிக்காவில் காண்டா மிருகங்கள் வேட்டை யாடப்படுவ தைத் தடுப் பதற்காக அவற்றின் கொம்புகளில் கதிரியக்க ஐசோ டோப்புகளை அந்த நாட்டு - அரசு பொருத்தத் தொடங்கி யுள்ளது.
4. 34 சதவீத பணவீக்கத்தை சந்தித்துள்ள நைஜீரியாவில் எரிபொருள்களுக்கு அளிக்கப்பட்டுவந்த மானியம் நிறுத் தப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு போராட்டம் வெடித்துள்ளது.
5. ரயில்வே பாதுகாப்புப் படை யின் (ஆர்பிஎஃப்) முதல் பெண் தலைமை இயக்குநராக (டிஜி) ஐபி எஸ் அதிகாரி சோனாலி மிஸ்ரா வெள்ளிக்கிழமை பொறுப்பேற் றார். இதன்மூலம் 143 ஆண்டுகால வரலாற்றில் முதல்முறையாக அந்தப் படைக்கு தலைமைப் பொறுப்பேற்றுள்ள பெண் அதிகாரி என்ற பெரு மையை அவர் பெற்றுள்ளார்.
6. இந்தியாவில் யூரியாவுக்கு அடுத்து அதிக தேவையுள்ள உரம் டிஏபி (டை அமோனியம் பாஸ்பேட்). இந்த உர விநியோகத்தில் உலக அள வில் சீனா முன்னணியில் உள்ளது. எது. இந்தியா தனது உரத் தேவைக்கு சீன இறக்குமதியை பெருமளவில் சார்ந் துள்ளது. இந்தச் சூழலில், டி. ஏபி உள்ளிட்ட உரங்களின் ஏற்றுமதி யில் அந்நாட்டின் கூடுதல் கட்டுப் பாடுகளால் இந்திய இறக்குமதி சரிந் துள்ளது. உரம் டிஏபி-க்கு மாற்றாக அமோனியம் பாஸ்பேட் சல்பேட் (ஏபிஎஸ்) உரத்தைப் பயன்படுத்த முடியும். ஏபிஎஸ் மூலம் நைட்ர ஜன், பாஸ்பரஸ், சல்பர் ஆகிய சத் துகள் கிடைத்தாலும் பாஸ்பரஸின் அளவு குறைவாகவே (20 சதவீதம்) உள்ளது. டி. ஏபி-யில் 40 சதவீத பாஸ் பரஸ்உள்ளது.
7. நாட்டின் 14-ஆவது குடியரசு துணைத் தலைவராக இருந்த ஜகதீப் தன்கர், தனது பதவிக் காலம் மேலும் 2 ஆண்டுகள் இருக்கும் நிலையில் பதவியை திடீரென ராஜிநாமா செய்தார்.
8. உலக தாய்ப்பால் வார விழா ஆண்டுதோறும் ஆக.1 முதல் ஆக.7-ஆம் தேதி வரை கொண்டாடப்படுகிறது.
9. அரசுப் பள்ளிகளில் அடிப்படை ஆங்கில மொழித் திறனை வளர்க்கும் வகையில் லெவல் அப்' திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்பு வரை மாணவர்களின் கேட்டல், வாசித்தல், பேசுதல் மற்றும் எழுதுதல் ஆகிய அடிப்படை ஆங்கில மொழி திறன்களை மேம்படுத்துவதற் காக 'லெவல் அப்' என்ற தன்னார்வத் திட்டத்தை பள்ளிக்கல்வித் துறை செயல்படுத்தி வருகிறது.
10. திருவண்ணாம்லையில் 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலான மினி டைடல் பூங்காவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.
11. ஆயுஸ்மான் பாரத், இந்திய அரசின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகும்.
12. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள்** :-
    1. லக்ஷ்யா சென் - இந்திய பேட்மிண்டன் வீரர்
    2. தருண் மன்னேபள்ளி - இந்திய பேட்மிண்டன் வீரர்
    3. வசந்தி தேவி - பேராசிரியர்,கல்வியாளர்.
    4. பெலாரஸ் அதிபர் - அலெக்ஸாண்டர் லுகஷென்கோ